நல்லூர் இளை நூலகம்
மாதகரசட்டும் மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை (20-06-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 204

## தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகளின் பட்டியலை தராவிடினும்

# பொருளாதார தடையை நீக்கினால் யுத்தக் கைதிகளை விடுவிக்க தயார்

## ஜனாதிபதியின் தூதுவரிடம் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் கைதிகளின் பட்டியலைத் தராவிடினும்—

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை அரசு நீக்குமானால்—

இப்போது உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிக்கத் தாம் தயார் என்று—

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பாதுகாப்புப் படையினர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உறவினர்கள் மேலும் சில தினங்கள் தங்குவர்

### தலைவர் பிரபா அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

கைதிகளின் உறவினர்கள் மேலும் சில தினங்கள் இங்கு தங்கிநிற்க விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அனுமதி வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேற்கண்ட தகவலை கைதிகளின் உறவினர்களிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த கைதிகளின் உறவினர்கள் நேற்று மாலை கொழும்பு திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

கைதிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடப்பதை அடுத்தே கைதிகளின் உறவினர்கள் கொழும்பு திரும்புவது தாமதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## யுத்தக் கைதிகளை சந்தித்தார் வீரசேகரா

யாழ்ப்பாணம், ஜூன் 20

உண்ணாவிரதம் இருந்து வரும் சிங்கள யுத்தக் கைதிகளை யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்று மாலை 6.30 மணியளவில் சந்தித்தார்.

யுத்தக் கைதிகளும், கைதிகளின் உறவினர்களும் அவரைக் கண்டதும் அழுது குழறினர்.

யுத்தக் கைதிகளின் உறவினர்கள் பிரிகேடியரிடம் தமது பிள்ளைகளை, சகோதரர்களை, கணவன்மாரை விடுவிப்பதற்கு எப்படியாவது அரசாங்கத்தை இணங்கச் செய்யுமாறு கேட்டார்கள்.

அவர்களின் சோகக் கதைகளைக் கேட்ட பிரிகேடியர் வீரசேகரா ஆறுதல் கூறினார்.

ஜனாதிபதியின் தூதுவரான பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்றுக் காலை 8.30 மணிக்கு பருத்தித்துறைக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் இன்று 8 ஆவது நாளை அடைகிறது

### கைதிகள் சோர்வுற்றநிலையில்

யாழ்ப்பாணம் ஜூன் 20

கைதிகளின் உண்ணாவிரதம் இன்று எட்டாவது நாளை அடைகிறது.

ஏழாவது நாளான நேற்று கைதிகள் மிகவும் சோர்ந்த நிலையில் காணப்பட்டனர்.

இதற்கிடையில் கைதிகளையும், அவர்களது நெருங்கிய உறவினர்களையும் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல்துறை பிரதிப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

அங்கு திரு அன்ரன் பாலசிங்கம் பேசுகையில், யுத்தக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரசாங்க அதிபர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் கொழும்பில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவைச் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

யாழ். மக்கள் போக்குவரத்துக்கு எதிர் நோக்கும் பிரச்சினைகள் —

பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் —

உணவுப் பொருள்கள் போதாமை —

உட்பட பல விடயங்கள் பற்றி அவர் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கிக் கூறினார்.

(இ-3)

## வீரசேகராவின் யாழ். பயணம்:

## கொழும்பில் நடந்த அவசர கூட்டத்திலேயே முடிவானது

கொழும்பு, ஜூன் 20

பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் விசேட தூதுவராக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பது என்ற முடிவு, ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பாதுகாப்பு உயரதிகாரிகளும் முக்கிய அமைச்சர் சிலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகரும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவுடன் நேற்று யாழ்ப்பாணம் திரும்பி இருந்தார்.

யாழ் அரசாங்க அதிபர் கடந்த வியாழக்கிழமையே கொழும்பு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

இ-3)

## இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம் ஜூன் 20

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு ஜூன் 20

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை ஆறு மணி முதல் நீக்கப்பட்டு விட்டதாக கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது.

(இ-எ)

## பருத்தித்துறைக்கு சென்ற தபாலக ஊழியர் ஏமாற்றம்

### குமணவில் தபால்கள் வரவில்லை

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பலில், தபால் பொதிகள் வந்திருக்கலாம் எனக் கருதி, அவற்றை எடுத்துவர நேற்று பருத்தித்துறை சென்ற யாழ் தபாலக ஊழியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தபால் பொதிகள் கப்பலில் எடுத்து வரப்படாததே இதற்குக் காரணம்

அதேபோன்று தபால்கள் வந்திருக்கலாம் என்று கருதி யாழ் பிரதம தபாலகத்துக்குச் சென்ற பொதுமக்களும் நேற்று ஏமாற்றம் அடைந்தனர். [இ 3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உண்ணாவிரதம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைதிகளை விடுவிப்பதற்கு, ஸ்ரீலங்கா அரசு தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கும் கைதிகளின் பெயர்ப் பட்டியலை வழங்கி அவர்களை பரிமாறிக் கொள்வது அல்லது தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது வன்ற கோரிக்கையை அரசின் பிரதிநிதியாக வந்துள்ள வீரசேகராவிடம் முன்வைக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இன்று மக்கள் படும் கஷ்டங்களையும் கைதிகளின் உறவினர்களுக்கு அவர் விளக்கினார். [இ-3]

# நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

புதுடில்லி, ஜூன் 20

பிரதமர் நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாவை தாம் வழங்கியதாக ஹர்ஷத் மேத்தா கூறியதை தொடர்ந்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளை அடுத்து—

நரசிம்மராவ் அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவர முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியும் பிற எதிர்க்கட்சிகளும் தயாரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஓர் அம்சமாக நரசிம்மராவ் அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும்பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பெங்களூரில் நடைபெற்று வரும் பாரதீய ஜனதா கட்சியின் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஒ)

# பாரதீய ஜனதா கட்சி மீது பிரதமர் நரசிம்மராவ் சீற்றம்

## நடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ஆக்ரோஷ உரை

புதுடில்லி, ஜூன் 20

ஹர்ஷத் மேத்தா விவகாரம் இந்திய அரசியலில் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து வருகிறது. பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அரசியலில் மிக இக்கட்டான ஒரு கட்டத்தில் இருக்கிறார்.

இந்த நிலைமையில் —

பிரதமர் நரசிம்மராவ் நேற்று நடந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் காரசாரமாக உரையாற்றினார்.

பாரதீய ஜனதா கட்சி ஹர்ஷத்மேத்தா விவகாரத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளது என்ற தோரணையில் பிரதமர் ராவ், அக் கட்சியை நேரடியாகவும், மறைமுகமாகவும் குற்றஞ்சாட்டி ஆக்ரோஷமாக உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்—

மதத்தை ஓர் அரசியல்கருவியாகப் பயன்படுத்திய ஒரு கட்சி தான் இந்த உத்தியைக் கையாள்கிறது என்றும் —

55 ஆண்டு பொது வாழ்வுப் பணிக்குப் பின்னர் இப்போது தமது நேர்மை தாக்கப்படுகிறது என்றும் கூறினார்.

கட்சியும், தாமும் இதை எதிர்த்துப் போராடப் போவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

தமக்கு எதிராகக் குற்றம் சாட்டியவர்கள் உடனடியாக தங்களது அடையாளப் பெயர்ப் பலகைகளை மாற்றிக் கொண்டு விட்டார்கள். என்றும் திரு. ராவ் மேலும் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சி தன்னுடைய நடவடிக்கையால் அரசியல் ஆதாயம் ஏதும் அடையவில்லை. உலகம் அதை ஓர் இந்து பயங்கரவாத ஸ்தாபனமாகப் பாக்கிறது—என்றார்.

பாரதீய ஜனதாக் கட்சியை கடுமையாகச் சாடிப் பேசிய திரு. நரசிம்மராவ், பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடக்கும் ஒரு தருணத்தில் பாரதீய ஜனதாக் கட்சி தெரு அரசியலில் ஈடுபட்டு பாபர் மசூதியை இடித்தது நமது சமயசார்பற்ற தோற்றத்தை மாசு படுத்தியது என்றும் கூறினார்.

கூட்டு நாடாளுமன்ற கமிட்டியின் விசாரணையை தடுப்பதற்கான ஒரு முயற்சியாக தமக்கு எதிராக இக்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என்றும் திரு. ராவ் கூறினார். (ஒ)

## பாடசாலைகளில்

திருநெல்வேலி ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் இரண்டாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு திருநெல்வேலி சிவன் வீதி கல்விக் கழகத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சியில் நல்லூர் மேலதிக அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (த)

## ஆலயங்களில்

யாழ். கச்சேரி கிழக்கு கடுக்காயடி ஸ்ரீ ஞான வைரவர் கோவில் மணவாளக் கோலத் திருவிழா நாளை திங்கள் காலை நடைபெறும். காலை 8-30 மணிக்கு அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகமும், மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்று, சுவாமி தெரு வீதி உலா இடம்பெறும். (த)

o o o

சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் இப்போது நடைபெற்று வரும் மண்டலாபிஷேகத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மூத்த சமயச் சொற்பொழிவாளர் சிவஸ்ரீ ச. ஈஸ்வரசர்மா 'தீரா நோய் தீர்த்தருள வல்லான்' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை அவர் 'நான் முன் செய்த புண்ணியம்' என்னும் பொருளில் சொற்பெருக்காற்றுவார். (அ)

## இசை விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள்

திருமறைக்கலாமன்ற இசை விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு மாலை 5. 30 மணிக்கு யாழ் பிரதான வீதியில் உள்ள மன்ற அரங்கில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சியில் அரியாலையூர் சங்கீத பூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் கௌரவிக்கப்பட உள்ளார்.

திரு. ச. பாலசிங்கம், திரு. எஸ். பத்மலிங்கம் ஆகியோரது ஒருமணி நேரக் கச்சேரிகளும், திருமறைக் கலாமன்ற மாதாந்தப் பாடல் தொகுப்பு நிகழ்ச்சியும் இரட்டையர் திரு. வி. கே. கானமூர்த்தி, திரு. வி. கே. பஞ்சமூர்த்தி ஆகியோரின் நாதஸ்வர இசைக் கச்சேரியும் இடம்பெற இருக்கின்றன. (இ-51)


அருள்மிகு
சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில்
மகோற்சவம்

7 ஆம் திருவிழா கைலாயவாகனக் காட்சி

மங்களகரமான ஸ்ரீமுகவருடம் ஆனி மாதம் 7 ஆம் நாள் [21 - 06 - 93] திங்கட்கிழமை காலை அபிஷேக ஆராதனைகளுடன் பகல் திருவிழா நடைபெறும்.

மாலை புதிதாக அமைக்கப்பெற்ற கைலாச வாகனத்திற்கு பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று, விசேட மங்களவாத்தியங்கள் ஒலிக்க முருகப் பெருமான் கைலாயக் காட்சி கொடுப்பார்.

7 ஆம் திருவிழா
உபயகாரர்

(5967)



திருமறைக் கலாமன்றம்
எடுக்கும்
இசை விழா
20-06-93
இறுதி நாள் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| கலைஞர் கௌரவிப்பு<br>இசைக் கச்சேரிகள்<br>மாதாந்தப் பாடல் அம்சம்<br>நாதஸ்வர இசை | மன்ற அரங்கில்<br>மாலை 6.00 மணிக்கு<br>ஆரம்பமாகின்றது. |

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நிர்வாகத்தினர்,
திருமறைக் கலாமன்றம்.

(சி/5289)



முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



| மலர்வு: | உதிர்வு; |
|---|---|
| 28 | 20 |
| — | — |
| 01 | 06 |
| — | — |
| 1950 | 1992 |

அமரர்
அந்தோனி பீற்றர் இராசநாயகம்

நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும்
நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே
நீர் இல்லாது துன்பம் பெருகுதே.

அன்பு மனைவி, பெற்றோர்,
சகோதரங்கள், உறவினர்கள்.

205/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(26168)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு
ஞானவீரபத்திரர் ஆலயம்
கௌரவிப்பு வைபவம்

வீரபத்திரர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 6 ஆம் நாள் (20–06–1993) ஞாயிற்றுக் கிழமை மாலை 7.00 மணியளவில்.

12–06–1993 இல் இருந்து மேற்படி ஆலய அலங்கார உற்சவ காலத்தில் ''கம்பராமாயணம்'' தொடர் விரிவுரை நிகழ்த்திய கம்பன் கழக தலைவர்: திரு. தி. திருநந்தகுமார் அவர்களை கௌரவித்தல்.

சாவகச்சேரி நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் ''ஆத்மஜோதி'' திரு. நா. முத்தையா அவர்களால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவர்.

சைவப் பெரியார்கள்
சிறப்புரை நிகழ்த்துவர்.

அடியார்கள் அனைவரையும் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்.

(26173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# தொலைக்கல்வி ஆசிரியர் பதிவுக்கட்டணம் ரூ. 300!

தொலைக்கல்வி ஆசிரியர் பயிர்சி நெறியில் பதிவுசெய்து பயிற்சி பெற்றுவரும் பயிற்சி ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் 300 ரூபாபதிவுக் கட்டணமாக செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தேசிய கல்வி நிறுவனம் இப்போது அறிவித்துள்ளது.

1991 — 93, 1992 — 94, 1993 — 95 ஆண்டு காலப் பகுதி நெறிகளுக்கான சகல பயிற்சி ஆசிரியர்களும் தத் தமது பயிற்சி நிலையங்களில் 300 ரூபா கட்டணத்தையும் செலுத்தி பதிவுசெய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் 10 தொலைக்கல்வி நிலையங்களிலும் 1300க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [அ]

# மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர் பெரும் பாதிப்பு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறைவினால் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று புகார் கூறப்படுகிறது.

குறிப்பாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் டாக்டர்கள் வரவுகுறைவாக இருப்பதால், அவ்விரு நாட்களிலும் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிலருக்கு மறுநாள் திங்கட்கிழமையே சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

பனையால் விழுந்த ஒரு தொழிலாளி, மாமரத்தில் இருந்து விழுந்த ஒரு சிறுவன் மற்றும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான சிலருக்குக் கூட அடுத்த நாளே முழுமையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்று புகார் தெரிவிக்கப்பட்டது. (ஓ-155)

# ஹேமாவுக்கு தலைமை பதவி; நான் முயற்சி எடுக்கவில்லை

## மல்லிமாராய்ச்சி இப்படிச் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 20

ஹேமா பிரேமதாஸாவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு கொண்டு வரும் எண்ணம் தமக்கு இல்லை என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி தெரிவித்தார்,

''இன்னொருவரை தலைமைப் பதவிக்கு கொண்டு வருமளவுக்கு நான் அதிகாரம் படைத்தவன் அல்லன். அப்படி அதிகாரம் கொண்டவனாக இருப்பின் நானே தலைமைப் பதவியை பிடிக்காமல், இன்னொருவரைக் கொண்டு வர முயற்சிப்பேனா?''

—இவ்வாறு திரு. மல்லிமாராய்ச்சி கேட்டார்.

மறைந்த பிரேமதாஸாவின் நெருங்கிய சகா மல்லிமாராச்சி ஆவார். (ஓ-எ)

## ஷெல் பீரங்கி தாக்குதல்

சுழிபுரம், ஜூன் 20

காரைநகர் முகாம் படையினர் கடந்த சில தினங்களாக ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடலில் இருந்தும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்படுகிறது.

கடந்த வியாழன் ஏவப்பட்ட ஷெல் ஒன்று சுழிபுரம் மேற்கு பகுதியில் வெடிக்காத நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

(ஓ-28)

மட்டக்களப்பில்

# மனித உரிமை மீறல்களில் இராணுவத்தினரே ஈடுபட்டனர்

## கிழக்குப் பிராந்திய தளபதி ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, ஜூன் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மனித உரிமை மீறல் சம்பவங்களின் போது இடம்பெற்ற வன்முறைகளில் பெரும்பாலும் இராணுவத்தினரே ஈடுபட்டனர்.

பி. பி. சி. செய்தியாளர் ஷியாக்கா நவாஸுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கிழக்குப் பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சமாதானக்குழு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே 3 ஆயிரம் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றதாக விவரம் வெளியிடப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 3 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாகவும், அவர்களுக்கு என்ன நடந்தது என்றும் பி. பி. சி. செய்தியாளர் கேட்டபோது, அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் லக்கி அல்கம சொன்னார்.

ஜே. வி. பி. வன்முறையின் போது தெற்கில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டமை குறித்தும் — தற்போது இடம்பெறும் மனிதக் கொலைகள் பற்றியும் அவரிடம் கேட்கப்பட்ட போது யுத்த காலத்தில் இவையெல்லாம் சகஜம் என்று அவர் கூறினார்.

எதிரிகளை அழிப்பது மூலமே சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

## சிறந்த நெல் இனம்

உடுவில், ஜூன் 20

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல் நுகர்ச்சி சங்கங்களின் சமாசத்தினர் விவசாயிகளுக்கு வேண்டிய சிறந்த வகை நெல் இனங்களை கொள்வனவு செய்து வழங்க உள்ளனர்.

எதிர்வரும் காலபோகத்தில் மூன்று, மூன்றரை மாத நல்லின நெல் இனங்கள் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமாசம் மேற்கொண்டுள்ளது.

(த-152)

## தேங்காய்ப் பாவனை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் தனிப்பட்ட ஒருவரின் தேங்காய்ப் பாவனை விகிதம் அதிகரித்திருக்கிறது. ஆண்டு ஒன்றில் ஒருவர் 129 தேங்காய்களைப் பயன்படுத்துகின்றார். 2 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த விகிதம் 90 ஆகவிருந்தது.

குடும்ப வருமானம் அதிகரிக்கும்போது தேங்காய்ப் பாவனையும் அதிகரிக்கிறது என்று தெங்குத் தொழில்ப் பயிர் அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

(இ-த)

# தமிழீழ பொதுக்கல்வி தேர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

இந்த ஆண்டுக்குரிய தமிழீழ பொதுக்கல்வித் தேர்வுக்கான விண்ணப்பங்களை, கோட்டங்கள் அனைத்தையும் நாளை திங்கட்கிழமை தரவுநிரற்படுத்தும்பணிப்பாளரிடம் ஒப்படைக்கும்படியும்—

இரண்டாம் தடவையாக தேர்வில் தோற்றுவோர் அவ்வப் பாடசாலை மூலம் தோற்றலாமெனவும்—

ஆங்கில இலக்கியம் படிக்கும் மாணவர்கள் ஆங்கில இலக்கியத்திற்கு விண்ணப்பிக்கலாமெனவும்— பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(இ-162)

# விவசாய பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்டத்திலே கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக வட்டவை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான விவசாய பயிற்சி வகுப்பொன்று கடந்த ஏப்ரல் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடத்தப்பட்டு வந்தது.

பயிற்சி வகுப்பு தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெற்று பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 9ஆம் திகதி பயிற்சிப் பாடசாலை அதிபர் திருமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. சின்னத்துரை, பொருண்மிய மேம்பாட்டுக்கழக யாழ். மாவட்ட இணைப்பாளர், கிராமிய உற்பத்திக் குழுபகுதி பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயிற்சி வகுப்பில் தாம் பெற்ற அறிவினை சுயசார்புப் பொருண்மியத்தை மேம்படுவதற்காக பயன்படுத்தும்படி பயிற்சியாளர்களை பொருண்மிய மேம்பாட்டுக்கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுக் கொண்டார். (ஓ)

# மக்கள் துயரில் பங்குகொண்டு நமது நாட்டில் வாழ்வோம்

## தென்னிந்திய திருச்சபை ஆயர் உரை

''நாம் எங்கள் நாட்டை விட்டு ஓடக்கூடாது. எங்கள் மூதாதையர் வாழ்ந்து வளம் பெருக்கிய எமது நாட்டில் நாம் தொடர்ந்து வாழ வேண்டும். எமது மக்கள் இப்பொழுது அனுபவிக்கும் கஷ்டங்களிலே நாம் பங்கு கொள்ளவேண்டும்.''

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயத்தின் புதிய பேராயர் அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் ஆண்டகை இவ்வாறு கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை புதிய பேராயருக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் நன்றியுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

முன்னாள்பேராயர் டி. ஜே. அம்பலவாணர் தலைமையில் வரவேற்பு விழா நடைபெற்றது.

புதிய ஆயர் தொடர்ந்து பேசுகையில்,

''அமெரிக்க மிஷனரிமார் தமிழ் மக்களின் கல்வி, சமுதாய முன்னேற்றத்துக்கு அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளனர். மருத்துவத் துறைக் கல்வி உட்பட தமிழ் மொழி மூலக் கல்வியை நடத்துவதில் தமிழரல்லாத அமெரிக்க மிஷனரிமார் என்றுமே பாராட்டுக்குரிய முன்னோடிப் பணியைச் செய்துள்ளனர். அவர்களின் சேவையை நாம் தக்கமுறையில் கௌரவிக்க வேண்டும்'' என்று கூறினார்.

முன்னாள் ஆயர் டி. ஜே. அம்பலவாணரின் இறைவணக்கப் பிரார்த்தனையுடன் ஆரம்பித்த விழாவில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் வரவேற்புப் பாடல் முதலில் இடம் பெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையா, யாழ். கத்தோலிக்க திருச்சபை ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் டாக்டர் ரி. டபிள்யு. ஜெயகுலராஜா, யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, தென்னிந்திய திருச்சபை யாழ். பேராய செயலாளர் வண. அ. அ போல் ஆகியோர் புதிய பேராயரின் சிறப்பியல்புகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் நன்றியுரை நிகழ்த்தினார்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களின் பாடல் நிகழ்ச்சியும் வரவேற்பு விழாவில் இடம்பெற்றது. (க)


கோண்டாவில் - இணுவில்

கொட்டம்பனை ஞானவைரவர் கோயில்

வருடாந்த அலங்கார

உற்சவ காலங்களில்



இன்று 20 - 06 - 1993 தொடக்கம் 01 - 07 - 1993 வரை

இரவு 7 - 00 மணிமுதல் 8 - 00 மணிவரை

சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன் [முன்னாள்உப-அதிபர், கோப்பாய் ஆ. கலாசாலை] அவர்களால்

பெரியபுராணப் பேருரைகள் நிகழ்த்தப்படும்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம், ★

[26160] - உபயகாரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய பூச்சியகற்றிய அழகிய ஆண், பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 222, ''லக்சுமி வாசா'', தெல்லிப்பழை வீதி, (வட்டு: இந்துக் கல்லூரிக்கு அருகில்), சித்தன்கேணி. (26118)

B 1 இன சேவல், பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 3 மாதம், 2 மாதம் நிரம்பியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. கணேஸ்வரன், 24, நாவலடி லேன், பேச்சியம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை. (26151)

### விண்ணப்பப்படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும், N C E. விண்ணப்பப் படிவங்களும் அருண் அச்சகம், இல. 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; சுன்னாகம் உதயன் சேவை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்

### காணி விற்பனை

விதானையார் வீதி, சுண்டிக்குளியில் 2 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. பத்மநாதன் 22/3A, விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (6261)

### தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (இ/5282)

ஸ்ருடியோ வேலைகள் பழகிய - பழக விரும்பும் பெண்பாலார் (அண்மையிலுள்ளோர்) விண்ணப்பிக்கவும் ஸ்ருடியோ, நித்ய சித்ரா, சங்கானை. (26159)

### ''நீமியா''

மண்ணை வளமாக்கி, பயிர் பாதுகாப்பு வழங்கி, விளைச்சலைப் பெருக்கிடும் 'நீமியா' பசளையாகவும், பூச்சி புழுக் கொல்லியாகவும் உதவுகிறது. புலோலி கமநலச் சேவை நிலையத்திலும் விற்பனையாகிறது. 'நீமியா' ஒரு கிலோ பக்கற் ரூபா 18/-. ''மில்க்வைற்''. (சி-5284)

### மணமகள் தேவை

வயது 30, திருவோணம் 3ஆம் பாதம், -விஸ் வதிவிட பிரஜை மணமகனுக்கு அழகிய, O/L படித்த மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். நல்ல பொருத்தம் இருப்பின் திருமணத்திற்கு சீதனம் தடையாக இராது செ. விஜயரத்தினம், இலட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு. (26132)

### மணமகன் தேவை

27 வயது, பூரட்டாதி, அழகிய மணமகளுக்கு உள்ளூர் B Sc., எக்கவுண்டன், என்ஜினியர் விரும்பத்தக்கது. செ. விஜயரத்தினம், இலட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, நவாலி. (26133)

### புலமைப் பரிசில் வகுப்பு

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப் பரிசில் Paper Class சனி, ஞாயிறு பிற்பகல் 4—6 நடைபெறுகின்றது. ஆண்டு 5 மாணவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாதிரிப் பரீட்சை நடைபெறும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (26155)

### வகுப்பு

Spoken English, English with Grammar and German Languages. ஆங்கிலம், ஜேர்மன் (டொச்) மொழிகள் - தனியாகவும், சிறு குழுக்களாகவும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. தொடர்புகொள்க: S. சொர்ணலிங்கம், இல. 4, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (K. K. S. வீதி, மனோகராத் தியேட்டர் அருகில்.) (26147)

### மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

### சோதிடம்

ஜாதக பலன், திருமணப் பொருத்தம், எண்சோதிடம் மற்றும் வெளியூரில் பிறந்தவர்களின் ஜாதகக் குறிப்புகள் எழுதிக் கொள்ளலாம். சிவா, 712, நாவலர் வீதி, அரியாலை. (6259)

### (O/L) MATHS

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (26164)

## பனம் வெல்லத்திற்கு கிராக்கி

தென்மராட்சி, ஜூன் 20

சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் தென்மராட்சிப் பகுதியில் பனம் வெல்லத்திற்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

பனம் வெல்லம் வாங்குவதற்கு மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதை தென்மராட்சியின் பல இடங்களில் காணக் கூடியதாக உள்ளது.

(த-117)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 10 — 1917

மறைவு: 21 — 05 — 1993

அமரர்

**கனகசபை தர்மலிங்கம்**

(சுதுமலை வடக்கு, மானிப்பாய்)

(இளைப்பாறிய பிரதம சிறாப்பர் - இலங்கை வங்கி)

நினைக்கின்றோம் ஐயா உங்கள் நற்பணிகள் தன்னை. நாங்கள் மதிக்கின்றோம் உங்கள் பண்பை தினமும். துதிக்கின்றோம் உங்கள் பாதம், வடிக்கின்றோம் கண்ணீர், நாமும் முடித்திலமோ எம் கடனை என்றும் ஐயா! தவிக்கின்றோம் உம் பிரிவால் என்றும், தணல்பட்ட புழுவைப்போல்; அந்தோ ஐயா! நலமுடன் எம்மை வளர்த்தீர்! உமக்கு நற்கடன் செய்வோம் என்று, நாங்கள் வளமுடன் வாழ்வதற்கு நல்ல வழி வகையும் செய்து வைத்தீர்! இன்று எம்மை கதி கலங்க வைத்துவிட்டு எமன் கூட காதவழி சென்று விட்டீர், எப்பிறவி தனில் உம்மை இனி நாங்கள் காண்பதுவோ!

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று 20-06-93 அன்னாரின் வீட்டுக்கிருத்தியத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (6265)

## 8ஆம் ஆண்டு நினைவலையும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



| அமரர்<br>**க. செல்லையா**<br>(அதிபர் அ. மி. த. க. பாடசாலை அளவெட்டி) | திருமதி<br>**மாசிலாமணி செல்லையா**<br>(பூமலர்)<br>(ஆசிரியர் அ. மி. த. க. பாடசாலை அளவெட்டி) |
|---|---|
| அன்னையின் மடியில்: 05—12—1936<br>ஆண்டவன் அடியில்: 24—06—1985 | அன்னையின் மடியில்; 27—04—1938<br>ஆண்டவன் அடியில்: 21—05—1993 |

திதி: 25 — 06 — 1993


அன்பின் உருவங்களாக, அறிவுச்சுடர்களாக பண்பின் உறைவிடமாய் விசுவாசமிக்க சேவகர்களாய், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றிற்கு உதாரண புருஷர்களாய் இறுதிவரை வாழ்ந்து காட்டிய எம் அன்புத் தெய்வங்களின் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திப்போம்.

மகன்: செல்லையா வாகீஸன் (பிரான்ஸ்),

மகள்மார்: கௌதமி, கௌசலா, கௌசிகா.

''திருவேரகம்'',
ஆசிரியமணி செல்லையா வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (26161)

## 7ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 08 — 08 — 1957

உதிர்வு: 20 — 06 — 1986

**அமரர் பவளன் கிறிஸ்ரி**

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், சகோதரி, உறவினர், நண்பர்கள்.

பாஷையூர். (26150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய உபகரணங்கள்

# அரசின் அங்கீகாரத்துக்காகவே காத்துக் கிடக்கின்றனவாம்!

கொழும்பு, ஜூன் 20

பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்த 15 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை யாழ் போதனா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைப்பதற்காக அரசாங்கத்தின் அங்கீகாரத்தை சுகாதார அமைச்சு எதிர்பார்த்திருக்கிறது.

அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' நாளிதழ் இப்படிச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமைச்சின் களஞ்சியசாலையில் இவ்வைத்திய உபகரணங்கள் வைக்கப்பட்டிருப்பினும், அவற்றை யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

அரசு அல்லது பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்தவுடன் வைத்திய உபகரணங்கள் முழுவதையும் யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கு அமைச்சு தயாராக இருக்கிறது என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

சுகாதார அமைச்சின் பண்டகசாலையில் அப்பொருள்கள் வைக்கப்பட்டிருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி, மத்திய அரசின் பொறுப்பில் தான் அவ்வைத்திய உபகரணங்கள் உள்ளன என்றும் —

சுகாதார அமைச்சு இது குறித்து சொந்தமாக எது வித முன்முயற்சியையும் எடுக்க முடியாது என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (த-எ)

## விடுதலை

அடையாள அட்டை இல்லாததால் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட விடுதி உரிமையாளரான தமிழர் ஒருவரை மாளிகாகந்தை நீதிவான் காமினி அமரசேகரா பிணையில் செல்ல அனுமதித்தார்.

வெள்ளவத்தையில் ''ஐலண்ட் பிரைட்'' என்னும் விடுதியை நடத்திவரும் பொன்னம்பலம் மகேஸ்வரன் என்பவரையே பொலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். [த 3]

## சூழல் பத்திரிகையாளர் ஒன்றியத்துக்கு ஐ.நா. விருது

கொழும்பு, ஜூன், 20

ஸ்ரீலங்கா சூழல் பத்திரிகையாளர் ஒன்றியத்திற்கு ஐ நா. சூழல் வேலைத் திட்ட ''பூகோள 500'' விருது வழங்கப்படவுள்ளது.

இப்பத்திரிகையாளர் ஒன்றியம்தான் ஸ்ரீலங்காவில் ஐ. நாவின் புகழ்பெற்ற இந்த விருதைப் பெறும் முதலாவது அரச சார்பற்ற நிறுவனமாகும். அத்துடன் உலகத்திலேயே ஸ்ரீலங்கா சூழல் பத்திரிகையாளர் ஒன்றியம்தான் இந்த விருதைப் பெறும் பத்திரிகையாளர் ஸ்தாபனமாகும்.

ஸ்ரீலங்காவிலும் ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும் சூழல் பற்றிய உணர்வை வளர்ப்பதில் ஒன்றியம் ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டியே இந்த விருது வழங்கப்படவுள்ளது.

விருது பெற்றவர்களைப் பற்றி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் ஸ்ரீலங்கா சூழல் பத்திரிகையாளர் ஒன்றியத்தைப் பற்றிப் பெரிதும் விதந்து பேசப்பட்டுள்ளது.

1987 முதல் ஒன்றியம் சூழல் பற்றிய செய்திகளை எழுதும் 850 க்கும் மேலான பத்திரிகையாளர்களைப் பயிற்றியுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (க)

## 5 குளங்கள் ஆழமாக்கப்படும்

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 5 விவசாயக் குளங்கள் ஆழமாக்கப்படவுள்ளன. ''போரூட்'' நிறுவனம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பொன்னாலை சின்னக் குளம், அராலி மத்தி கணவக்கைகுளம், அராலி வடக்கு பண்டியாவத்தை குளம், சங்கானை மேற்கு பேய்க்குளம், சங்கரத்தை வட்டக்குளம் ஆகியவையே ஆழமாக்கப்பட உள்ளன (த-12)

## திருட்டு

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரின் மெய்ப்பாதுகாவலரின் கைத்துப்பாக்கி காணாமல் போயுள்ளதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மெய்ப்பாதுகாவலர் தமது வீட்டில் வைத்துவிட்டு நித்திரை கொண்டதாகவும்—

அதிகாலை பார்த்தபோது அது காணாமல் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சேபால அடுத்த வாரம் பதவி ஏற்பு

கொழும்பு, ஜூன் 20

தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், எயர்லங்கா தலைவராகவும் ஜனாதிபதி விஜேதுங்காவால் நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் சேபால ஆட்டிகல தனது பணிகளை அடுத்தவாரம் பொறுப்பேற்பார்.

தற்போது லண்டனில் உள்ள அவர், அங்கு தனது கடமைகளை முடித்துக் கொண்டு அடுத்த வாரம் கொழும்பு திரும்புகின்றார்.

அண்மையில் ஜெனரல் ஆட்டிகல எலிசபத் மகாராணியைச் சந்தித்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார். (ஓ-எ)

## பிரபாவை புகழ்ந்து கோஷித்த பாட்டாளி மக்கள் கட்சியின் 31 தொண்டர்கள் கைது!

சென்னை, ஜூன் 20

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைப் புகழ்ந்து கோஷம் எழுப்பியதற்காக பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த 31 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

வாழப்பாடி அருகே உள்ள இடப்பாடி கிராமத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் பேசிய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒரு லொறியில் ஊர் திரும்பிக் கொண்டிருந்த போது திரு. பிரபாகரனுக்கு ஆதரவாகக் கோஷம் எழுப்பினார்கள்.

பொலீஸார் அந்த லொறியைத் துரத்தி வந்து, அதனை காரைப்பிட்டி அருகே தடுத்து நிறுத்தினார்கள். பின்னர் அந்த லொறியில் இருந்த பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் அனைவரையும் பொலீஸார் கைது செய்ததுடன் லொறியையும் கைப்பற்றியது. (ஓ-எ)

## 'ஜெ'யை பதவி கவிழ்க்காமல் உறங்க மாட்டேன்

### சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்

முதலமைச்சர் ஜெயலலிதாவை பதவியில் இருந்து கவிழ்க்காமல் உறங்கமாட்டேன். ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி முன்கண்டவாறு மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

தஞ்சாவூரில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் டாக்டர் சுவாமி இப்படி சூளுரைத்தார். ஜெயலலிதாவை இன்னும் இரண்டு மாதங்களில் பதவியில் இருந்து அகற்றுவதைச் செய்து முடிக்கப்போவதாகவும் அவர் கூறினார். (த-எ)

## கோபாலசாமி விவகாரம்: தி.மு.க. உட்கட்சிப் பூசல் சில தினங்களில் வெடிக்கும்

திராவிட முன்னேற்றக்கழக எம். பியான வை. கோபாலசாமிக்கும் தி. மு. க. தலைமைக்கும் இடையே நடந்து வரும் உட்கட்சிப் போராட்டம் இன்னும் ஒருசில தினங்களில் பூதாகாரமாக வெடிக்கும்.

— இப்படி சென்னையில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோபாலசாமிக்கு தி.மு.க. வில் ஆதரவு பெருகி வருவதால் அவரைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் தி.மு.க. தலைமைப்பீடம் ஈடுபட்டிருப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ-எ)

வண்ணார்பண்ணை காட்டுத்துறை

அருள்மிகு

ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில்

மகோற்சவகால தெய்வீகப் பேருரைகள்

நிகழ்த்திய சொற்பொழிவாளர்

செஞ்சொற்சீராளன் –

திருமிகு. த. சிவகுமாரன் அவர்களை

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)

பாராட்டிக் கௌரவிக்கும் விழா

காலம்: சண்டேஸ்வரர் உற்சவ தினம்

தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, - யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை: பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா

பாரட்டுரை வழங்குவோர்:

திரு. கோ. சி. வேலாயுதம்
[யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர்]

திரு. இ. மகேந்திரன்
[அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி]

திரு. ஆறு. திருமுருகன்
[கம்பன் கழகப் பேச்சாளர்]

நிறைவுரை: திரு. ச. ஸ்ரீநிவாசன்
(ஆலய அறங்காவலர்)

நன்றியுரை: திரு. பெ. க. பா. பாலசங்கர்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

தேவஸ்தானம்,
காட்டுத்துறை பிள்ளையார் கோவில்.

அன்பளிப்பு: மக்மிலன் புத்தகசாலை
3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

கிளை: ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்.

(சி-5285)

உ

★ திருமண அழைப்பு ★

கலாபவனம் அச்சுவேலி வடக்கு
சின்னத்துரை தம்பதிகளின்
புதல்வன்
ரவீந்திரன்
அவர்களுக்கும்

பழையவீதி இருபாலை-கோப்பாய்
குணம் தம்பதிகளின்
புதல்வி
பிறேமலதா
அவர்களுக்கும்

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆனித் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை ஜூன் மாதம் 24 ஆம் திகதி (24 - 06 - 1993) காலை 9-24 மணியளவில் நீர்வேலி கந்தசாமி கோவிலில் மாங்கல்ய சோபனம் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பை ஏற்றுக் கொள்ளவும்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

நன்றி:

திருமதி அன்பு சின்னத்துரை. குணம்-சரஸ்வதி தம்பதிகள்

(26167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பக் கல்லூரி

## இறுதிப் பரீட்சை — 1992

உயர் வணிகத் தகுதித் தேர்வு மூன்றாம் வருடத்திற்கான (H. N. D. C. III) 1993-06-21ஆம் திகதிய பரீட்சை மட்டும் பிற்போடப்பட்டுள்ளது, மறுநாள் பரீட்சைக்கு ஆயத்தமாக வருமாறு அறியத் தருகிறேன்.

[சி-5286] அதிபர்.



யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

## பதவி வெற்றிடம்

### உதவி விரிவுரையாளர்

தகைமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய பட்டதாரி (B. Sc. Agri.) ஆக இருப்பதுடன் இரண்டு வருட தொழில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் ஒரு வருடம் விவசாய பாட நெறியை கற்பித்த அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் வறணி மிசன் பண்ணையில் 3 மாத காலம் தங்கியிருந்து பயிற்சி அளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

விரும்புவோர் விண்ணப்பக் கடிதத்தையும் தகைமைக் குறிப்பையும் கீழ்க்காணும் விலாசத்திற்கு 30 - 06 - 1993 க்கு முன் அனுப்பிவைக்கவும்.

த. குகதாசன்.
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார் மடம், சுன்னாகம்.

(26156)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 01 1950

உதிர்வு: 01 07 1992



அமரர்

### சின்னத்துரை சோமாஸ்கந்தன்

(ஆனந்தன் - சுதுமலை)

(ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி: 20 — 06 — 1993

இல்லறப் பூங்கா தன்னில்
இனிதுடன் வாழ வைத்தீர்!
மாணவர் மாண்பிற்காக
மகத்தான சேவை செய்தீர்!
உற்றார் உறவினர்க்கு
உறுதுணையாக நின்றீர்!
இன்றுடன் ஓராண்டெனினும்
மறப்போமா என்ஞான்றும் நாம்!

மனைவி, உற்றார், உறவினர்.

காளிகோவில் ஒழுங்கை,
பலாலி றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(26145)

## மருந்து வகை விநியோகம்

உடுவில், ஜூன் 20

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு இவ்வருடம் இரண்டாம் கந்தாயத்துக்கு தேவையான மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ் வைத்தியசாலைக்கு தேவையான பல மருந்து வகைகளை அண்மையில் வழங்கினர். (த-152)

## வீதி விளக்கு திட்டம் விஸ்தரிப்பு

அரியாலை, ஜூன் 20

யாழ். மாநகரசபை வீதி விளக்கு அமைக்கும் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க உள்ளது.

அண்மையில் பருத்தித்துறை வந்தடைந்த குமண கப்பலில் இதற்கான கண்ணாடிகள் வந்து சேர்ந்துள்ளதை அடுத்தே மாநகரசபை தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்க உள்ளது. (த-17)

## பொருள்கள் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இவ்வாரம் தொடக்கம் பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைக்கு குத்தரிசி, உழுந்து, பட்படம் ஆகியவை வழங்கப்படுகிறது. (த-30)

## போதைப்பொருள் கடத்தியவருக்கு தூக்குத்தண்டனை

போதைப்பொருள் கடத்திய குற்றத்திற்காக அவுஸ்திரேலிய நாட்டவர் ஒருவருக்கு மலேசியாவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இவருடன் இரண்டு மலேசிய போதைப்பொருள் விற்பனையாளர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

1985ஆம் ஆண்டில் 150 கிராம் போதைப்பொருளை கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவருடங்களுக்கு முன்னர் இந்த அவுஸ்திரேலியருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதை அவுஸ்திரேலிய அரசு கண்டித்துள்ளது. (த-6)

## பாரதிராஜா உண்ணாவிரதம்

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்கள் உள்ளிட்ட 100 பேர் நேற்று சென்னையில் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைத் தொடக்கியிருக்கிறார்கள். தென்னிந்திய திரைப்பட வர்த்தக கழகத்துக்கு இன்று நடைபெறவிருக்கிற தேர்தலை தள்ளி வைக்க வேண்டும் என்று கோரி இவர்கள் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

உண்ணாவிரதத்துக்குத் தலைமையேற்றிருக்கும் தயாரிப்பாளரும் இயக்குனருமான திரு. பாரதிராஜா செய்தியாளர்களிடம் பேசும்போது கடந்த 6 மாத காலமாகத் தமிழ்த் திரைப்படத் துறையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா திரைப்படத் துறையின் பிரதிநிதிகளின் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கும் இந்தத் தருணத்தில் மிகவும் அவசரமாகத் தேர்தலை நடத்துவது கண்டிக்கத்தக்கது என்று கூறினார். (க)


# நியூ விமாகி

சைக்கிள் உதிரிப்பாகங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையாளர்களுக்கு விலைக்கழிவு உண்டு.

மற்றும்

பெயின்ரர், ரின்னர், கிறிஸ், ரெக்சின், செரமிக் பொருள்களுக்கும் நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்.


## நியூ விமாகி

இல. 27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5319)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 01 — 1929



மறைவு: 21 — 05 — 1993

### அமரர் விஸ்வநாதர் மார்க்கண்டு


உங்கள் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தினாலும், உங்கள் நினைவு எம் நெஞ்சங்களைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

61/5, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்.

(26116)

## 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி



புங்குடுதீவு

### திருமதி ஆறுமுகம் சுந்தரம்மா

(வள்ளியம்மை)

திதி: 20 — 06 — 1993

மறைந்த சைவப் பெரியார் முத்தமிழ் அறிஞர் புங்குடுதீவு நிலையினார் ஆறுமுக உபாத்தியாயரின் மனைவியும், மறைந்த ஆசிரியைகள் - திருமதிகள் யோகாம்பிகை, கமலாம்பிகை, சாரதாம்பிகை ஆகியோரின் தாயாரும் ஆவார்.

இவரது ஆத்மாசாந்திக்காக வேண்டிநிற்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்;
மகன் குடும்பம்:

மருதனார்மடம்.

(5964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## உதயன்

### மருந்தும் மக்களும்

வைத்தியரினால் வழங்கப்பட்ட மருந்துச் சிட்டுக்கு மட்டுமே ஆங்கில மருந்து விற்பனையாளர்கள் மருந்து வகைகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த முடிவு வரவேற்கத்தக்கதாகும். காலத்தின் தேவையும் ஆகும்.

வைத்தியரின் மருந்துச் சீட்டுக்கு மட்டுமே மருந்துகளை விற்கவேண்டும் என்ற விதி புதியதல்ல. முன்னர் எல்லாம் தவறாது, அச்சொட்டாகப் பின்பற்றப்பட்ட விதி. ஆனால் இடைநடுவில் அந்த விதிமுறை எப்படியோ வழக்கிழந்ததாயிற்று.

மருந்து வகைகள் நோய் தீர்ப்பன. ஆனால் அவற்றை உரிய வியாதிக்கு, உரிய அளவுப் பிரமாணத்தோடு, உரிய நேரத்தில் உட்கொள்ள வேண்டும். நோயின் இயல்பும், மருந்தின் தன்மையும், மருந்தின் செயற்பாடும் அதன் விளைவுகளும் தெரியாதவர்கள் அவற்றைக் கையாண்டு, நோயாளர்களை வழிநடத்தும்போது, மருந்து நோய்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக நோயாளர்களையே தீர்த்துக்கட்டி விடும். இல்லையேல் பல பாரதூரமான விளைவுகளை உண்டாக்கி உடல் நலனை பெரிய அளவில் கெடுத்துவிடும்.

இதனை உணராமல், இப்போது மக்கள் எந்தவித வைத்திய அல்லது மருந்தியல் படிப்பறிவோ அன்றிப் பட்டறிவோ இல்லாமலே தங்களுக்குத் தாங்களே வைத்தியர்களாக மாறிவிடும் தன்மை பரவலாகக் காணப்படுகிறது. வேகமாகப் பரவிவருகிறது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன மருந்தையே வைத்தியர்கள் கொடுக்கிறார்கள் என்பதைத்தெரிந்து வைத்துக் கொண்டு அல்லது ஊகித்து அவற்றை மருந்தகங்களில் வாங்கி உட்கொள்ளும், தம்மைக் கெட்டிக்காரர்களாக நினைத்துச் செயற்படும் சுய வைத்தியர்கள் ஒரு ரகம்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு ஓர் ஆங்கில மருந்தகத்தில் விற்பனையாளராகப் பணிபுரிந்து விட்டால் அல்லது ஒரு வைத்தியரின் எடுபிடியாகப் பணிபுரிந்து விட்டால் தாமும் வைத்தியர் பணிபுரியலாம் என்று பலரும் இப்போது நினைத்து விடுகிறார்கள். நினைப்பது மட்டுமென்ன, ''இராசி''யான ''வைத்தியர்களாக''ப் பிரகாசிக்கவும் செய்கிறார்கள்!

வைத்திய வசதிகள் குறைந்த இப்போதைய நெருக்கடியான காலத்தைப் பயன்படுத்தி, இப்படிப் பல செயற்கை வைத்தியர்கள் உருவெடுத்துள்ளார்கள்! இந்த நிலைமை மிகவும் ஆபத்தானதாகும். மருந்து வகைகள் இல்லாமல் உண்டாகும் கெடுதலை விட, செயற்கை வைத்தியர்களாலும், சுய வைத்தியர்களாலும் உண்டாகும் ஆபத்துப் பல மடங்காகும்.

எனவே, வைத்தியர்களின் மருந்துச் சிட்டுகளுக்கு மட்டுமே மருந்து வகைகளை வழங்க வேண்டும் என்பதுடன் மட்டும் நின்று விடலாகாது. தகுதியுள்ள, அனுபவம் உள்ள வைத்தியர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, பகிரங்கப்படுத்தப்பட்டு அவர்களின் மருந்துச் சிட்டுகளுக்கு மட்டுமே மருந்து வழங்கவும் வழி செய்ய வேண்டும்.

மற்றும் ஒன்று. மருந்து என்ற பெயரில் நாட்பட்ட, காலம் தப்பிய மருந்து வகைகள், போலி மருந்து வகைகள் என்பன தேநீர்க் கடைகள், பல சரக்குக் கடைகள், பெட்டிக் கடைகள் எல்லாவற்றிலும் விற்கப்படுகின்றன. இதற்கும் தடையும் கட்டுப்பாடும் உடன் தேவை.

காட்டில் அதிரடிப் படையினர் தீவிர தேடுதல்

# வீரப்பனின் முக்கிய கூட்டாளி சைமன் உட்பட 13 பேர் கைது

## வெடிமருந்து, கண்ணிவெடிகள் மீட்பு

சென்னை, ஜூன் 20

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனின் முக்கிய கூட்டாளியான சைமன் உட்பட 13 பேரை தமிழக அதிரடிப் படையினர் நேற்றுக் காலை கைது செய்தனர்.

கடந்த ஏப்ரலில் வீரப்பனைப் பிடிக்க படையினர் சென்ற சமயம் அவர்களில் 22 பொலீஸார் கண்ணிவெடியில் உயிரிழக்க சைமன் காரணமானவன் என்றும் —

பிடிபட்டவர்களில் மாதப்பன் என்பவன் கண்ணிவெடிகளை இயக்குவதில் சிறப்புப் பயிற்சி பெற்றவன் என்றும் கூறப்படுகிறது.

தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் தமிழக அதிரடிப் படையின் தலைவரும், காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநருமான டயிள்யூ. ஐ. தேவாரம் சேலத்தில் செய்தியாளர்களிடம் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

தமிழக அதிரடிப்படையின் கண்காணிப்பு அதிகாரி திரு. சஞ்சே அரோரா தலைமையில் நேற்றுக் காலை 6 மணியளவில் பெரியார் மாவட்டம் தோணிமடுவு காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்திய போதே 13 பேரும் கைது செய்யப்பட்டனர்.

தேடுதலின் போது முதலில் 25 பேர் வரையான கூட்டத்தினர் திடீரென பொலீஸார் மீது கைஎறிகுண்டுகளை வீசி, நாட்டுத் துப்பாக்கிகளால் சுட்டனர் என்றும்—

அப்போது அதிரடிப் படையினர் தொடர்ந்து முன்னேறிச் சென்ற சமயம் வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்தோரில் 12 பேர் தப்பி காட்டுக்குள் ஓடி விட்டார்கள் என்றும்—

மிகுதி 13 பேர் மட்டும் கைது செய்யப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### வெடி மருந்துகள், கண்ணி வெடிகள் மீட்பு

அவர்களிடம் இருந்து நாட்டுத் துப்பாக்கிகளும் ஏராளமான வெடி மருந்தும், மற்றும் 15 கண்ணிவெடிகளையும் படையினர் கைப்பற்றினர் என்றும் — அறிவிக்கப்பட்டது.

### விஷம் அருந்தி மரணம்

இதற்கிடையில்—

வீரப்பனின் நீண்ட நாள் நண்பனான சலங்கன் நேற்று முன்தினம் சேலம் மாவட்டம் லக்கம்பிட்டியில் உள்ள அவனது மகள் வீட்டிற்கு சென்று விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டான் என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (ஒ)

## வீரச்சாவு

கடந்த 9 ஆம் திகதி காலை 6 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் பெண்டுகள் சேனையில் உள்ள பத்தா வெளி என்ற இடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில், விடுதலைப்புலிகள் போராளியான லெப்டினன்ட் வாணி [சண்முகம் தங்கராசா - முறக்கொட்டாஞ்சேனை] வீரச்சாவடைந்தார். [ஒ-3]

## செல்வநாயகம் நினைவு பேருரை

பேராசிரியர் சோ. செல்வநாயகம்நினைவுப் பேருரையின் ஒன்பதாவது தொடர் எதிர் வரும் 23 ஆம் திகதி மாலை 3.00மணிக்கு கைலாசபதிகலையரங்கில் நடைபெறும்—

''1970 க்குப்பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள்— எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் உரை

(8ஆம் பக்கம் பார்க்க)

# விவசாய டிப்புளோமாவுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 20

வவுனியா விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்புளோமா கற்கை நெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும்—

போட்டிப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும்— யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி கற்கை நெறி செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கும் என்றும்—

இந்தப் பரீட்சை தொடர்பான விவரங்கள் ஜூலை 27 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என யாழ் உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) தெரிவித்தார். (இ-த)

'உதயன்' கிண்ணத்துக்கான

# உதைபந்தாட்டம்; நாளை இறுதியாட்டம்

''உதயன்'' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலானஉதைபந்தாட்டசுற்றுப்போட்டியின்இறுதியாட்டம் நாளை மாலைபருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறும்.

தமிழீழ கடற் பிராந்திய சிறப்புத் தளபதி திரு சூசை பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை வழங்குவார்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் முதல் காட்சி ஆட்டத்தில்ஷப்றா அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதும்.

தொடர்ந்து இரண்டாவது காட்சி ஆட்டத்தில் கம்பர் மலை கழுகுகள் அணியை எதிர்த்து கண்ணகி வி. க. அணி மோதும்.

மாலை 5 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ்வி க.அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் வி. க. அணி மோதும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

''கே. ஸி. ஸி. ஸி.'' கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். நாற்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து பல்கலைக் கழக அணி மோதும்.

o o o

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் அணி மோதும்.

# நானாட்டானில் படையினர் முன்னேறுவதற்கு முயற்சி

## அரிப்பில் நிலைகொண்டுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்டம் நானாட்டான் பகுதியில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முன்னேற முயற்சிகளை மேற்கொண்டனர்.

அன்று காலை 10 மணியளவில் நானாட்டான் இராணுவ முகாமில் இருந்து கவச வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினர், கரையோரக் கிராமமான அரிப்பில் நிலைகொண்டிருந்தனர்.

மீண்டும் நேற்று முன்தினம் காலை அரிப்புக்கு அருகில் உள்ள ஊறல் என்ற கரையோரக் கிராமத்தில் படகுகள் மூலம் வந்திறங்கிய இராணுவத்தினர் அப்பகுதியில் உள்ள 10 பொதுமக்களைப் பிடித்துக்கொண்டு திரும்பிச் சென்றனர்.

பொது மக்களை கைது செய்துகொண்டு மீண்டும் அவர்கள் அரிப்புக்கு சென்று அங்கு நிலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## பொருளாதாரத் தடையை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைத்திருக்கும் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் கைதிகளின் பெயர்ப்பட்டியலை ஸ்ரீலங்கா அரசாங்கம் தர மறுப்பதால்—

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்கினால் தமது பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுதலை செய்யத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் காலையில் நடைபெற்ற முதற் கட்டப் பேச்சின் போது தெரிவித்தனர்.

பொருளாதாரத் தடையால் யாழ்ப்பாண மக்கள் தாங்கொணாத் துன்பத்திலும் சொல்லொணாக் கஷ்டங்களிலும் மூழ்கியுள்ளதாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்தியாவசியப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இத்தடை நீக்கப்பட்டால், சிங்களக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதுடன் சமாதான சூழ்நிலை உருவாகுவதற்கும் அது ஏதுவாகும் எனவும் அவர்கள் எடுத்து விளக்கினர்.

### கொழும்புக்கு அறிவித்தார்

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை பிரிகேடியர் வீரசேகரா செஞ்சிலுவைச் சங்க சர்வதேசகக் குழு மூலமாக ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு தெரியபபடுத்தினார்,

மீண்டும் மாலை நான்கு மணியளவில் இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெற்ற போது அரசாங்கத்தின் பதிலை பிரிகேடியர் வீரசேகரா விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்தார்.

பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றிய விவகாரத்தை கூட்டுப்படைத் தலைமையகம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்றும் —

அதுபற்றிய முடிவை எடுப்பதற்கு சிறிது காலம் தாமதமாகும் என்றும்—

கொழும்பில் இருந்து அரசாங்கத்தரப்பில் வந்தபதிலை பிரிகேடியர் எடுத்து விளக்கினார்.

### கொழும்பு செல்வார்

விடுதலைப் புலிகளின் கோரிக்கை சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக பிரிகேடியர் வீரசேகர இன்று காலை கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பித்த முதற்சுற்றுப் பேச்சுக்கள் நண்பகல் 12 மணி வரை கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமை காரியாலயத்தில் நடந்தன.

பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியட் சுவஸ்ஸர் ஆகியோரும்—

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் — பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். (அ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## யேம்ஸ் அருளானந்தம்

யேம்ஸ் அருளானந்தம் 19-06-93 பிற்பகல் காலமாகி விட்டார்.

இவர் எலிசபேத்தின் அன்புக் கணவரும், இன்மனுவேல், அன்ரன் யோகன், விஜயன், ஜெயராஸ் (கொலன்), கைடி (ஜேர்மனி), மணி, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெறோம் (சுவிஸ்), நிக்ஷன் (கொலன்), பபி, யூட், நிறோ, றாஜா, நிஷாந்தன், நிரேஷன், ஊரசன், ஏஞ்சல், சுரேஸ், வினோஜன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20-06-93 (இன்று) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
அன்ரன் யோகன் (மகன்)

1/13, புது வீதி, 1ம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(26175)

## பொன்னம்பலம் இராஜரட்ணம்

சங்கானை கிழக்கு தேவாலய வீதியை பிறப்பிடமாக கொண்ட பொன்னம்பலம் இராஜரட்ணம் அவர்கள் (18-06-93) காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், குணரட்ணம் (இத்தாலி), லிலி (இத்தாலி), கிருபா (சங்கானை ப. நோ. கூ. ச.), ஜெயரட்ணம் (இத்தாலி) ஆகியோரின் பாசம்மிகு தந்தையும், யூலியட் (இத்தாலி), கருணாகரன் (கொழும்பு), பொன்னம்பலம் (மானிப்பாய் ப. நோ. கூ. ச. கணக்காளர்), றஞ்சினி (இத்தாலி), வசந்தி (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20-06-93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. பொன்னம்பலம் (மருமகன்)

தேவாலய வீதி,
சங்கானை.
(26176)

## மயில்வாகனம் பொன்னுத்துரை

ஆனைப்பந்தியைச் சேர்ந்த மயில்வாகனம் பொன்னுத்துரை அவர்கள் 19-6-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் செல்லக்கண்ணுவின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரி, ஜெகதீஸ்வரி (ஆசிரியை ஆனைப்பந்தி மிஷன் வித்தியாலயம்), நிர்மலேஸ்வரி, கங்கேஸ்வரி, ஸ்ரீகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பிராஜா மகேந்திரன், துரைராஜா, மங்களா ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கரி (வேம்படி மகளிர் கல்லூரி), சத்யன், நித்யன், கணனன், கஜனன், ஆரணி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20-6-93) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தம்பிராஜா (மகள்)

98/2 பருத்தித்துறை றோட்,
ஆனைப்பந்தியடி,
(26169)

# உடுகம்பொல படகு மூலமே இந்தியா சென்றிருந்தாராம்

கொழும்பு, ஜூன் 20

அரசின் அனுமதியுடன் தமிழ் நாட்டில் இருந்து கொழும்பு திரும்பி உள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல படகு மூலமே தமிழ் நாடு சென்றிருந்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

மேற்கு நாடுகளில் அவர் தஞ்சம் கோரியதாகவும் தஞ்சம் மறுக்கப்பட்டதை அடுத்தே படகு மூலம் சட்ட விரோதமாக தமிழ் நாடு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதற்கிடையில் உடுகம்பொல நாடு திரும்பியதை அடுத்து பொலீஸ்மா அதிபர் உட்பட பல உயர் பதவிகளில் உள்ளவர்களின் நிலை கேள்விக்குரியதாகி இருப்பதாக பி.பி.சி. சிங்களச் சேவையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச பொலீஸ்மா அதிபர் ஏனெஸ்ட் பெரேரா ஆகியோர் மீது உடுகம்பொல முன்னர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இருந்தார். (இ-3)

## செல்வநாயகம்...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக புவியற்றுறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (இ)

## யுத்தக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்து சேர்ந்தார்.

விசேட விமான மூலம் வெள்ளிக்கிழமை மாலை பலாலி வந்து சேர்ந்த அவர் 'குமண' சப்பல் மூலம் காங்கேசன் துறையில் இருந்து நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தார்.

விடுதலைப்புலிகள் பிரமுகர்களாலும், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளினாலும் அங்கு வைத்து வரவேற்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டார்.

விடுதலைப் புலி வீரர்கள் நவீன ஆயுதங்களுடன் பூரண பாதுகாப்பு வழங்கி அவரை அழைத்து வந்தனர். யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருந்த பகுதிக்கும், அந்தப் பகுதிக்குச் செல்லும் பாதைகளிலும் புலி வீரர்கள் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர்.

ஜே. வி. பி. கிளர்ச்சியாளர்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பாக புனர்வாழ்வு அமைச்சின் ஆணையாளர்களில் ஒருவராகக் கடமையாற்றும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா முன்னாள் இராணுவ அதிகாரியாவார் (அ-3)


# அச்சு வேலைகள்

★ திருமண அழைப்பிதழ்கள்
★ அந்தியேட்டிக் கல்வெட்டுகள்
★ துண்டுப் பிரசுரங்கள்
★ பில் புத்தகங்கள்
★ கடிதத்தலைப்புகள்
★ நூல்கள்

எவ்வகையான அச்சு வேலைகளுக்கும் பைண்டிங் வேலைகளுக்கும்

நாட வேண்டிய இடம்:

## இராசன் அச்சகம்

144, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(26144)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை)

கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (19 6-93) சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் நீர்வேலி விளானைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற அம்பலவாணர் - கணபதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், இராஜஇராஜேஸ்வரி அம்மா, கணேஸ்வரன் (A.K.V), ஞானேஸ்வரதேவி, இரத்தினேஸ்வரி, குகனேஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செ. கனகசபாபதி (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டிசுட்டான்), ஜமுனா, பரமேஸ்வரன் (ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா), சிவலிங்கம் (இரட்ணா மோட்டர்ஸ்), புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதன் (லண்டன்), நிலானி, ரமேஸ், சுமதி, கவிதா, பிறிந்தா, ஜீவனா, மனோஜிதன், ஜெயன், ஜெனனி, நிசானி, கேமாலினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, வைத்திலிங்கம், திருமதி முத்துப்பிள்ளை, இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நீர்வேலி அரசகேசரி விநாயகர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று 20-6-93 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி சிவியாக்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. கணேஸ்வரன் (A.K.V)

அரசகேசரி விநாயகர் வீதி,
நீர்வேலி.
(26172)


யாழ். நகர போஷாக்கின்றி வாடும் மக்களின் மேம்பாட்டிற்காக

யாழ். பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து வழங்கும்

# "நெஞ்சக் கனகல்"

[ நவீன நாடகம் ]

இடம்
யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி மதுரம் அரங்கு

காலம்
20-6-93
ஞாயிறு
பி.ப 3.30 மணி

அன்பளிப்பு: ரூபா 50/- 20/- 10/-

விளம்பர அன்பளிப்பு:
Promoters Engineering Ltd.
(அ-5288)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org